கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

வைகாசி மாத இதழ்
NEWS BULLETIN
MAY 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
07/06	பெற்றோர் கலந்துரையாடல் (@12pm)
14,21/06	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தமிழ்ப் பேச்சுப் பரீட்சை
28/06/2025	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தமிழ்ப் பரீட்சைகள்
13/07/2025	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith Piries)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Vocal (Carnatic) (Mr. Dheenadayalan Pathmanathan)	12.30pm – 2.30pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	1.00pm – 5.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri Kirish)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri Jeyaseelan)	11.00am – 3.00pm
Vocal (Carnatic) (Mrs. Vanathy Sureskumar)	9.00am – 1.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	11.30am –12.30pm
Miruthangam (Mr.Wijayarajah Mayilvaganam)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani Saravanathasan)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Tamil	11.30am –12.30pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar Devaraj)	10.00am –12.00am
Free 11plus Maths (Mr.Krish)	9.00am – 11.00am



முக்கிய அறிவித்தல்

தமிழ்ப் பாடசாலையானது 10/05/25 முதல் 29/06/25 வரையும் MEADOW PARK SCHOOL (WHITLEY ACADEMY) ABBEY RD, COVENTRY CV3 4BD என்னுமிடத்தில் நடைபெறும் என்பதையும்,

05/07/25 முதல் மீண்டும் வழமைபோல் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ என்னும் முகவரியில் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.



We would like to inform everyone that Tamil School will be held from 10/05/25 to 29/06/25 at Meadow Park School (Whitley Academy) Abbey Rd, Coventry CV3 4BD and will resume as usual from 05/07/25 at 45 Blondvil St Coventry CV3 5EQ.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில் 17/05/2025 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் அப்பாவித்தனமாகக் கொல்லப்பட்ட ஆன்மாக்களுக்கு உணர்வுபூர்வமாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு கந்தையா அரியரத்தினம் ஐயா, கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவரும் தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன், நிர்வாக அலுவலர் திருமதி சிவகலா சுரேஷ்தாஸ் ஆகியோர் நினைவரைகளை ஆற்றியிருந்தனர்.







முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் வழங்கப்பட்டு எமது இளஞ் சமுதாயத்தினருக்கு அந்தப் பேரவலம் பற்றிய நினைவுகள் கண்முன் கொண்டுவரப்பட்டன.








கதம்பம் பல்சுவை நிகழ்வு

இந்நிகழ்வு WORLD HARMONY AND PEACE அமைப்பினரால் பிரதி வியாழன் தோறும் இரவு 8 மணிக்கு இணைய வழியில் நடாத்தப்பட்டு வருகிறது. 15/05/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில் செல்வி திவ்யா நக்கீரன் "தமிழ்மொழியின் சிறப்பு" என்ற தலைப்பில் பேச்சையும், செல்வி அம்றிதா சந்திரமோகன் பாடலையும், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் உபசெயலாளரும், தமிழாசிரியையுமான திருமதி ரஜனி ஜோன்சன் அவர்கள் இம்மாத நிகழ்வுகளைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கியதோடு, "உதிரத்தில் சிந்திய உறவுகள்" என்ற தலைப்பில் கவிதையையும் வழங்கியிருந்தார்.

22/05/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வி கவிநயா சுரேஸ்தாஸ் கவிதையையும், செல்வன் ஹரி நக்கீரன் புதிய ஆத்திசூடியையும், செல்வன் தரணிஸ் ஜெயந்தன் ஆறுமுகநாவலர் பற்றிய பேச்சையும், செல்வன் சந்தோஷ் சிவநேசன் பாரதியார் பற்றிய பேச்சையும், செல்வி டிவீனா நிகேதன், செல்வன் ஜகீதன் நிகேதன் ஆகியோர் பாடல்களையும் வழங்கியிருந்தனர்.





கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக தமிழாசிரியை திருமதி தவமலர் திருநாவுக்கரசு அவர்கள் "மறக்குமா நெஞ்சம்" என்ற தலைப்பில் முள்ளிவாய்க்கால் பேரவலம் பற்றிய கவிதையை வழங்கியிருந்தார்.



29/05/25 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வன் பவிசன் அரவிந்தன் தலைவர் மாமா பற்றிய பேச்சையும், செல்வி கவிநயா சுரேஸ்தாஸ் மே 18 பற்றிய கவிதையையும், செல்வன் சஜித் கேதீஸ்வரன் தைப்பொங்கல் பற்றிய பேச்சையும், செல்வி சபீனா கோகிலநாதன் தமிழின் சிறப்பு பற்றிய கவிதையையும், செல்வன் மதுசன் கஜேந்திரா அம்மாவைப் பற்றிய கவிதையையும், செல்வி கேனுஷா கேதீஸ்வரன் பெண்ணின் பெருமை பற்றிய கவிதையையும், செல்வி அம்றிதா சந்திரமோகன் பாடலையும், செல்வன் அனுஜன் ஜெயசங்கர் அன்பு பற்றிய கவிதையையும் வழங்கியிருந்தனர்.



தமிழாசிரியர்களுக்கான செயலமர்வு

ஒவ்வொரு தவணை முடிவிலும் நடைபெற்றுவரும் பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் மாதிரிப் பரீட்சைக்கான வினாத்தாள்களைத் தயாரிக்கும் முறை பற்றிய செயலமர்வு 18/05/2025 அன்று நடைபெற்றது. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் இணையம் மற்றும் வலையமைப்பு இணைப்பாளர் திரு சந்தனராஜா பிரபுசங்கர் அவர்கள் அதனைத் திறம்பட நடாத்தியிருந்தார்.



மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

இதயம் மறக்குமா இனப்படுகொலையை
குடிசை இன்றிக்கூட அலைவோமென அறியாமல்
கூடி இருந்தோம் கூடி வாழ்ந்தோம்
கார்மேகம் போல் சூழ்ந்து கொண்டது போர்மேகம்

உடைமைகளை தலையில் ஏந்தினோம்
உயிரினை கையில் ஏந்தினோம்
கால்போன திசையில் மனமில்லாமல்
இடிந்த இதயத்தோடு இடம்பெயர்ந்தோம்

அண்ணா காப்பாத்துங்கோ!
எங்கயம்மா போய்டா! என்ர ஐயோ!
என்று எம்மவர்களின் அலறலின் ஒலம்
ஆழ்மனதை துளைத்துக் கொண்டிருக்கிறது

சூட்டை நீரை குடிநீராய் பருகினோம்
கால்வயிறு கஞ்சிக்கும் அலைந்தோம்
ஆலோலம் கேட்ட இடமெல்லாம் - இப்போது
மரண ஓலம் கேட்கிறது

தூக்கம் தொலைந்து போனது
உடமையும் அழிந்து போனது
தொழில் துறையும் இன்றி
சொந்தமண்ணில் அகதிகளானோம்

முடிந்து போனது யுத்தம் - அதில்
படிந்துமிடப்பது எம்மவர் இரத்தம்
முள்ளிவாய்க்கால் முடிவில்லை – அதில்
முளைப்பான் தமிழ்ப் பிள்ளை

திருமதி தவமலர் திருநாவுக்கரசு
தமிழாசிரியை

உதிரத்தில் சிந்திய உறவுகள்

சற்று உற்று பார்ப்போம்
உலகமே உருண்டோடுது
நம் தேசம் சிந்திய இரத்தங்களை
சேமித்து வைத்ததில் எஞ்சியவை
இவைதான்
என ஏளனமாக பார்க்கும் கூட்டங்கள்
இரக்கமே இல்லாமல் இனவெறியினர்
நமது உயிர்களை அளித்த ஆண்டோ
இத்தோடு பதினாறாகும்

வானும் உயர்ந்தது போல்
உருவாக்கத்தின் முதல் இனம் நாம்
சண்டையில் சலனமின்றியே சடலமாகி
சமூகத்திற்கே கருணை இன்றி கண்
பார்வையானோம்

பல வேளைகளில் தினமும் வந்து போகிறது
ஒற்றை பனைமரமும் ஒற்றுமையாக நாம்
வாழ்ந்ததும்
ஓவென்று அழ வேண்டும் போல் உள்ளது
நம் மண்ணில் புதையுண்டவர்களை எண்ணி

உயிரை பறிப்பவனுக்கு தண்டனை
உணர்வுகளை கொன்றவனுக்கு இல்லை
தரையை பாயாக்கி படுத்த போதும்
பாறையை அரித்தது போல் துளைத்தன
குண்டுகள்
நாரையை போல் மிதந்தார்களே நீரில்
பிணங்களாக நம் உறவுகள்

ஐனா கேட்கவில்லை அயலான்
கேட்கவில்லை
அயர்ந்தும் நாங்கள் தூங்கவில்லை
வீட்டின் முன்கிளைகள் தறிய
விரைவாக வந்த குண்டுகளினால்
நூலிழை வித்தியாசத்தில் தப்பியும்
தாண்டி வந்து தனக்கு நேர்வது
இன்னதென்று தெரியாமலே
புணரப்பட்டு புதைக்கப்பட்டதை
சகித்துக் கொள்ளத்தான் முடியுமோ
வெம்பி அழுதாலும் வேதனைதான் மிஞ்சும்

உணர்வுகளின் உச்சம் தலைவிரித்தாட
எம் கண்மணிகளை தாரை வார்த்தோமே
முதுகெலும்பில்லா முரடர்களுக்கு
உயிர் இருந்தும் உணர்வுகள் இல்லாத
ஒவ்வொரு கண்ணீர் முத்துக்களும்
உடலை சுமக்கும் கல்லறைதான்

இந்த கீழ்மைகள் எப்போது
சமூகத்தினுள் களையப்படும்
எத்தனை வருடங்கள் ஓயாமல்
கத்தினாலும்
ஆதிக்க மனப்பான்மை எம் குரல்வளையை
இன்னமும் நசிக்கிக் கொண்டேதான்
இருக்கிறது
நம்மை மௌனமாக கடந்தும்
செல்கிறது.....

உதிராத உணர்வுகளோடு



Rajani Johnson
(கவிஞர் , தமிழாசிரியை)

ஈழத்துப் புலமைகள் பாகம் 28

கடந்த இதழிலே உடுவில் முத்துக்குமார கவிராயர் பற்றிப் பார்த்திருந்தோம்.இவ்விதழிலே சங்குவேலி என்னும் இடத்தில் முத்துகுமாரப்பிள்ளை என்பவரின் மகனாக பிறந்த வில்லியம் தேவின்ஸ் என்ற தமிழறிஞரை பற்றிப் பார்ப்போம்.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் அதிபராக இருந்தவர்.

ஆங்கிலமொழியிலும் தமிழிலும் புலமையுடையவராக திகழ்ந்தவர்.ஆங்கில மொழியை தமிழுக்கு மொழிபெயர்க்கும் போது சரியான அர்த்தமுள்ள சொற்களைப் பயன்படுத்துவார்.வின்ஸ்லோ அவர்கள் தமிழகராதி எழுதியபோது அதற்குத்துணையாக இருந்து உதவியவர்.

எண்கணித உச்சரிப்பு முறையை மாற்றியமைக்க முயற்சித்தவர்.ஆனால் அவை அறிஞர்களால் அங்கீகரிக்கப்படவில்லை.

அவற்றின் ஒருபகுதியைகண்போம்.

ஒன்பது என்ற சொல் தொண்டு என்றும்,பின்பு ஒன்பது என்ற சொல் பின் பாதியாக வரும் பத்தொன்பது,இருபத்தொன்பது போன்ற சொற்களை பதின் தொண்டு,இருபதின் தொண்டு எனவும்,தொண்ணூறு என்ற சொல்லை தொன்பதுஎனவும் தொள்ளாயிரம் என்பது,எழுநூறு,எண்ணூறு என்பது போன்று தொண்ணூறு என அழைக்கப் படவேண்டுமெனவும் எழுதியிருந்தவர்.

பாரதம் இராமாயணம் போன்ற நூல்களில் இருந்து சில கவிதைகளைத் திரட்டி எழுதி வெளியிட்டார்.

நியாய இலக்கணம் என்ற நூலையும் வெளியிட்டவர்.இவையன்றி இலக்கண விதிகளைத் திரட்டி "தமிழ் வியாகரணம்" எனும் நூலையும் வெளியிட்டவர்.

இவர் கவிதை இயற்றும் திறமை மிக்கவராக திழ்ந்திருகிறார்.

"உலகம் புகழ் நியாய இலக்கணம்யுத்தியதன்
கலைவித்தைஎன்ப நியாயனடையினுக் காதாரமாய்
உளவுமில க்கணமே தெளியுங்களை வித்தை என்ப
தலைமின்று புந்தியனுமிக்கவே விதியைந்திடுமே "

இவர் பல தனிக் கவிதைகளும் எழுதியுள்ளார்.

(மீதி அடுத்த இதழில் தொடரும்)பி

ஆக்கம் திரு தவத்துரை மாணிக்கம் ஆசிரியர்

